# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**மாண்புமிகு பிரதமர் டாக்டர் ஹரிணி அமரசூரிய அவர்கள் கொழும்பில் நடைபெற்ற கலாசார உறவுகளுக்கான இந்திய பேரவையின் (ICCR) 75 ஆவது ஸ்தாபக தின கொண்டாட்டங்களில் கலந்துகொண்டு சிறப்பித்தார்**

கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் கலாசார பிரிவான சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் 2025 மே 30 ஆம் திகதி கொழும்பில் ஒழுங்கமைத்திருந்த கலாசார உறவுகளுக்கான இந்திய பேரவையின் 75 ஆவது ஸ்தாபக தின நிகழ்வுகளில் மாண்புமிகு இலங்கை பிரதமர் டாக்டர் ஹரிணி அமரசூரிய அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தார். இந்நிகழ்வில் நடைபெற்ற இந்திய இலங்கை பாரம்பரிய நடன வடிவங்கள் மற்றும் மெல்லிசை நிகழ்வுகள் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்வுகள் கலாசார நல்லிணக்கம் மற்றும் உலகளாவிய தன்மையை வெளிப்படுத்தும் ஒரு நேர்த்தியான அம்சங்களாக காணப்பட்டிருந்தன.

02. இந்தியாவின் கலாசார இராஜதந்திரத்தின் முன்னரங்கத்தில் காணப்படும் கலாசார உறவுகளுக்கான இந்திய பேரவையின் ஸ்தாபக தினம் மகத்தான முக்கியத்துவத்தினை கொண்டிருக்கின்றது. இத்தினமானது இந்நிறுவனம் அமைக்கப்பட்டதனை நினைவுகூரும் அதேவேளை இந்தியாவுக்கும் உலகுக்கும் இடையிலான புரிந்துணர்வு நல்லெண்ணம் மற்றும் மேலதிக ஒத்துழைப்பு ஆகியவற்றினை மேம்படுத்தும் ஆற்றலையும் கொண்டுள்ளது. அது மட்டுமல்லாமல் குறித்த பேரவையினால் முன்னெடுக்கப்படும் சகல திட்டங்களினதும் மையத்தில் காணப்படும் பன்முகத்தன்மை, உள்ளடக்கம் மற்றும் பரஸ்பர மரியாதை ஆகியவற்றின் பெறுமானங்களை இது அடையாளப்படுத்துவதுடன், கலாசார பரிமாற்றங்கள் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றின் கலங்கரை விளக்கமாகவும் அமைகின்றது .

03. இந்த நிகழ்வினை ஆரம்பித்து வைத்த இந்திய பிரதி உயர் ஸ்தானிகர் டாக்டர் சத்யாஞ்சல் பாண்டே அவர்கள் கலாசார உறவுகளுக்கான இந்திய பேரவையின் 75 ஆவது ஸ்தாபக தினம் கொண்டாடப்படும் சந்தர்ப்பத்தில் இந்த பேரவையின் இலங்கை குடும்பத்தினருக்கு தனது வாழ்த்துகளை தெரிவித்திருந்தார். அத்துடன் கலாசார உறவுகளுக்கான இந்திய பேரவை தனது 75 ஆண்டுகள் நிறைவினை கொண்டாடும் நிலையில், இலங்கையில் உள்ள இந்திய

உயர் ஸ்தானிகராலயத்தின் கீழான கலாசார உறவுகளுக்கான இந்திய பேரவையான சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் ஸ்தாபிக்கப்பட்டு தற்போது 25 ஆண்டுகள் நிறைவினை கொண்டாடுவதாக அவர் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் காணப்படும் நிலைபேறான நட்புறவின் சாட்சியமாக ஸ்தாபிக்கப்பட்ட இந்த நிலையம் கலாசார பரிமாற்றங்கள், திறன் வளர்ச்சி மற்றும் கலந்துரையாடல்கள் ஆகியவற்றுக்கான ஒரு மையமாக திகழ்கின்றது.

04. இதேவேளை இங்கு உரை நிகழ்த்தியிருந்த பிரதம விருந்தினரும் கலாசார உறவுகளுக்கான இந்திய பேரவையின் முன்னாள் மாணவியுமான மாண்புமிகு பிரதமர் டாக்டர் ஹரிணி அமரசூரிய அவர்கள் கலாசார உறவுகளுக்கான இந்திய பேரவையினை வாழ்த்திய அதேசமயம் கலாசார உறவுகளுக்கான இந்திய பேரவை ஊடாக டில்லி பல்கலைக்கழகத்தில் தான் பயின்ற முன்னைய அனுபவங்கள், தனது தனிப்பட்ட மற்றும் கல்வி பயணத்தினை அந்த அனுபவங்கள் எவ்வாறு வடிவமைத்திருந்தன என்பது குறித்தும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்திருந்தார். கல்வித்துறையில் உலகின் இரண்டாவது பாரிய மையமாக திகழும் இந்தியா தற்போது ஆயிரத்துக்கும் அதிகமான பல்கலைக்கழகங்கள் மூலமாக பரந்த அளவிலான கற்கைநெறிகளை வழங்கி வருகின்றது. பட்டப்படிப்புகள், பட்ட மேற்படிப்பு மற்றும் கலாநிதி கற்கைநெறிகள் உள்ளிட்ட கற்கைநெறிகளை கலாசார உறவுகளுக்கான இந்திய பேரவை முழுமையான நிதி அனுசரணையுடன் வருடாந்தம் 200க்கும் அதிகமான புலமைப் பரிசில்களை இலங்கை மாணவர்களுக்காக இந்தியாவில் உள்ள 120க்கும் அதிகமான பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்களில் வழங்கி வருகின்றது.

05. இந்நிகழ்வில் கல்வியாளர்கள் மற்றும் கலாசார உறவுகளுக்கான இந்திய பேரவையின் முன்னாள் மாணவர்கள் உள்ளிட்ட அதிதிகளின் உரைகளும் இடம் பெற்றிருந்தன. குறிப்பாக இந்தியாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகராக நியமனம் பெற்றிருக்கும் மஹிஷினி கொலன்னே, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் பி.எம்.சி.திலகரத்ன, இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சங்கைக்குரிய டாக்டர் ஹோமகம தம்மானந்த தேரர், வவுனியா பல்கலைக்கழகத்தின் ஸ்தாபக துணை வேந்தர் பேராசிரியர் ரி. மங்களேஸ்வரன் உள்ளிட்டோர் உரை நிகழ்த்தி இருந்தனர்

06. அத்துடன் இந்தியாவில் பயின்ற புகழ்பெற்ற கலைஞர்களான கலாநிதி ரவிபந்து வித்யாபதி, சந்தன விக்கிரமசிங்க, கீத் பிரேமச்சந்திர, வெரோனிகா திஸாநாயக்க, அஷித் அத்தபத்து, லஹிரு கிம்ஹன கோமாங்கொட, பேஷல மனோஜ் மற்றும் அவர்களது குழுவினரின் கலை நிகழ்வுகளும் அன்றைய தினம் இடம்பெற்றிருந்தன. தலைமுறை தலைமுறையாக கலாசார தூதுவர்களை வளர்ப்பதிலும், புரிந்துணர்வு பாலங்களை உருவாக்குவதிலும், இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நிலைபேறான பிணைப்பை வலுப்படுத்துவதிலும் கலாசார உறவுகளுக்கான இந்திய பேரவை மற்றும் சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் ஆகியவற்றின் வகிபாகத்தை இந்நிகழ்வு மீண்டும் உறுதிப்படுத்தியது.

7. இந்தியாவிற்கும் உலகிற்கும் இடையிலான கலாசார உறவுகள் மற்றும் பரஸ்பர புரிதலை மேம்படுத்தவும் வலுப்படுத்துவதற்கும், ஏனைய நாடுகள் மற்றும் மக்களுடன் கலாசார பரிமாற்றங்களை ஊக்குவிப்பதற்கும், இந்தியாவின் முதலாவது கல்வி அமைச்சர் மௌலானா அபுல் கலாம் ஆசாத் அவர்களால் 1950 ஆம் ஆண்டு கலாசார உறவுகளுக்கான இந்திய பேரவை நிறுவப்பட்டது. கடந்த 75 ஆண்டுகளாக உலக அரங்கில் இந்தியாவின் வளமான கலாசார பாரம்பரியத்தை மேம்படுத்துவதில் கலாசார உறவுகளுக்கான இந்திய பேரவை முக்கிய பங்கு வகித்து வருகிறது. கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் இலங்கையில் உள்ள கலாசார உறவுகளுக்கான இந்திய பேரவை நிலையமாகும்.

***

**கொழும்பு**
**2025 மே 30**